**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் – கூறு – I - 2016**

இராண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் – கூறு – I இன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கை மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முன்னாள் சுகாதார அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் தேசிய மட்டத்தில் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த அதேநேரம் மாகாண மட்டத்தின் நடவடிக்கைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், 2013–2017 ஆண்டிற்கான தேசிய சுகாதார அபிவிருத்தித் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கான நிதி உதவியை வழங்குவதற்காக செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொற்றாத நோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கான இயலுமைக்காக பொதுச் சுகாதாரத்தின் செயலாற்றல் நியமங்களை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,270 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியன் (ஐ.அ.டொலர் 200 மில்லியன்) ஆனதுடன் அதில் ரூபா 24,006 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 123.31 மில்லியன் (ஐ.அ.டொலர் 190 மில்லியன்) செயற்திட்டத்தின் கூறு – I இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 யூலை 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தனியாக சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கூறு – I இற்கான நிதிக்கூற்று என்பவற்றின் மீதான கருத்துரைகளை உள்ளடக்கியிருந்தது.

**1.3 நிதி அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஒதுக்கீட்டு கணக்குகளின் தொகுப்பிலிருந்த இந்த நிதி அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதி அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதி அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதி அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதி அறிக்கையின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதி அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதி அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதி அறிக்கையில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்து சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் ஏற்படுத்தப்பட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன சுகாதாரத்துறையின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதி அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2016 திசெம்பர் 09 இன் 252/2016 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை என்பவற்றிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்ததா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஒதுக்கீட்டு கணக்குகளை அடிப்படையாகக் கொண்ட நிதி அறிக்கையானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 2016 திசெம்பர் 09 இன் 252/2016 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. திறைசேரிக் கணனி அச்சீட்டுத் தாள்கள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் பேணப்பட்ட புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டு கணக்குகள் உடன்பட்டிருந்தன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

தாய்லாந்தில் வைத்தியசாலை நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீடு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றிய வரிசை அமைச்சின் 59 உத்தியோகத்தர்களின் விமானப் பயணச்சீட்டு, பயிற்சிநெறிக் கட்டணம் மற்றும் இடைநேர் செலவுகளை எதிர்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் செலவிடப்பட்ட ரூபா 18.17 மில்லியன் தொகை மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட 03 வெவ்வேறான செலவின விடயக் குறியீடுகளின் வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கில் தவறுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

வரிசை அமைச்சிற்கு இணைக்கப்பட்டுள்ள செயற்திட்டப் பணிப்பாளர் மற்றும் கணக்காளர் உள்ளடங்கிய செயற்திட்டத்தின் முக்கிய பதவியணி நிலைகள் முழுநேர அடிப்படையில் அத்தகைய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2014 மே 21 இன் டிஎம்எஸ்/சீ/1/16/செயற்திட்டம் ஆம் இலக்க கடிதத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகளுக்கு முரணாக பதிற்கடமை அடிப்படையில் செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். இந்த விடயம் முன்னைய ஆண்டிற்கான எனது அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நிதிசார் உடன்பாடுகள் இணங்காமை

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், 2015 பெப்ரவரி 28 இலிருந்து ஆரம்பித்து செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதிவரையான ஒவ்வொரு வருடமும் சுற்றாடல் முகாமைத்துவ கட்டமைப்பின் செயலாற்றலை மதிப்பிடுவதன் மூலம் சுற்றாடல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். செயற்திட்டமானது இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்காததுடன் இது எனது முன்னைய அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ கூறு – 1 | 190 | 24,006 | 2,324.5 | 6.63 | 973.92 | 9.36 | 1,357.77 |
| | **190** | **24,006** | **2,324.5** | **6.63** | **973.92** | **9.36** | **1,357.77** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் மீளாய்வாண்டிற்காக ரூபா 6,562.5 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 43.75 மில்லியன் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் வரிசை அமைச்சிற்காக ரூபா 2,324.50 மில்லியன் மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்களிற்காக ரூபா 3,306 மில்லியன் ஆகிய தொகைகள் மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டில், 41.90 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 973.92 மில்லியன் தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 24,006 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 190 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், மொத்த ஒதுக்கீட்டின் 5.65 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 1,357.77 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 9.36 மில்லியன் தொகை மாத்திரமே 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரிசை அமைச்சால் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், செயற்திட்டத்தின் மிகுதி 02 ஆண்டுகள் காலப்பகுதியின் போது முழு ஒதுக்கீட்டையும் பயன்படுத்தும் சாத்தியத்தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் கீழ் அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகள் 03 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகள் மற்றும் 11 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 11 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளில் 03 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளினதும் 09 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளினதும் விரும்பிய பெறுபேறுகள் அடையப்பட்டிருந்தன. பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) பணவளிப்பு இணைப்பு குறிகாட்டி - 01 இன் கீழ் இலங்கையிலுள்ள வைத்தியசாலையின் அவசர சிகிச்சை சேவைகளின் முன்னேற்றத்திற்கான செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நாட்டிலுள்ள 14 வைத்தியசாலைகளில் புதிய அவசர சிகிச்சை பராமரிப்பு பிரிவுகளை நிர்மாணிப்பதற்கும் 14 ஏனைய வைத்தியசாலைகளில் ஏற்கனவேயுள்ள அவசர சிகிச்சை பராமரிப்பு பிரிவுகளை தரமுயர்த்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தன. கணக்காய்வுப் புலனாய்வுகளின் பிரகாரம், ஏற்கனவேயுள்ள அவசர சிகிச்சை பராமரிப்பு பிரிவுகளை தரமுயர்த்துதல் மீதான 09 ஒப்பந்தங்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. ரூபா 1,192 மில்லியன் கிரயத்தில் 04 புதிய அவசர சிகிச்சை பராமரிப்பு பிரிவுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்கள் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 02 ஆண்டுகள் கடந்த பின்னர் 2015 இல் வழங்கப்பட்டிருந்தன. களுத்துறை மற்றும் பொலன்னறுவையிலுள்ள பொது வைத்தியசாலைகள், யாழ்ப்பாணத்திலுள்ள போதனா வைத்தியசாலை மற்றும் கல்முனையிலுள்ள ஆதார வைத்தியசாலை என்பவற்றிலுள்ள அத்தகைய நிர்மாண வேலைகள் மீதான பௌதீக செயன்முன்னேற்றம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50 சதவீதம் தொடக்கம் 85 சதவீதம் வரையிலான வீச்சில் இருந்தன.

(ஆ) செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், காசநோய் அறிகுறிகளை கண்டறியும் விகிதத்தை அதிகரித்தல், அவற்றின் மீது பொதுமக்களிற்கு கல்வியை வழங்குதல் மற்றும் நவீன கண்டறியும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் என்பவற்றிற்காக பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டி – 09 இன் கீழ் நாடளாவிய ரீதியில் காசநோய் அறிகுறிகளை கண்டறிவதற்காக 13,577 நபர்கள் பரிசோதிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு முழுவதும் 9,293 நபர்கள் மாத்திரமே கண்டறியப்பட்டிருந்தனர். கணக்காய்வுப் பார்வையின் பிரகாரம், புதிய காசநோயாளிகளினை இனங்காணுதலானது நோய்களை இனங்காணுதல் மற்றும் அவற்றின் மீதான தொடர்ச்சியான சிகிச்சைகள் தொடர்பாக நோயாளிகளை அறிவூட்டுவதில் பிரதானமாக தங்கியுள்ளது. ஆகையால், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், ஆரம்பத்திலேயே நோய்களை கண்டறிதல் மற்றும் அவற்றின் மீதான சிகிச்சைகள் என்பவற்றிற்கான வசதிகளை முன்னேற்றுதல் என்பவற்றின் மீது அதிகளவு கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

(இ) பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டி – 01 இன் கீழ் ஆரோக்கியமான வாழ்கைமுறை நிலையங்களூடாக 40 வயதிற்கு மேற்பட்ட நபர்களிற்கான தொற்றாத நோய்களிற்கான திரையிடல் (Screening) வசதிகளை உயர்த்துவதற்கான நடவடிக்கையை செயற்திட்டம் எடுத்திருந்தது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், வைத்திய ஆலோசனை நோக்கங்களிற்காக ஆரோக்கியமான வாழ்க்கைமுறை நிலையங்களிற்கு 2016 இல் 1,209,843 நபர்களும் 2015 இல் 1,461,211 நபர்களும் மாத்திரமே வருகைதந்திருந்தமையால் வைத்திய ஆலோசனை சேவைகளிற்காக பொதுமக்களிடையே அத்தகைய நிலையங்கள் போதியளவில் கவரப்பட்டிருக்காததை இது வெளிப்படுத்தியிருந்தது. மேலும், தொற்றாத நோய்கள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைமுறை

நிலையங்களினூடாக வழங்கப்பட்ட வசதிகள் தொடர்பாக மக்களிற்கு கல்வி புகட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3.3 ஒப்பந்தம் நிர்வாகம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 6,853.46 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 53.38 மில்லியனிற்கு 14 நேரியல் வேகமூட்டிகள், 08 சீரி சிமுலேட்டர்கள் மற்றும் 08 விறேசிதெறபி இயந்திரங்கள் ஆகிய புற்றுநோய்க்கான சிகிச்சையளிப்பு உபகரணங்களை விநியோகித்து செயற்படுத்துவதற்காக 02 வெளிநாட்டு விநியோகஸ்தர்களால் 2010 செப்தெம்பரில் மேற்கொள்ளப்பட்ட வேண்டப்படாத பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளமுடியாத நிதி நிபந்தனைகள் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தன. எனினும், 2015 இல் உரிய ஒப்பந்தமானது சர்வதேச ரீதியில் புதிய விலைமனுக்களை கோராமல் அதே விலையில் அதே விநியோகஸ்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 476 மில்லியன் பெறுமதியான 02 நேரியல் வேகமூட்டிகள் 2015 திசெம்பர் 02 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 யூன் 30 வரையிலும் உரிய இயந்திரங்களை நிறுவுவதற்கான கொங்கிறீற் நிலவறைகள் (bunkers) அமைக்கப்பட்டிருக்காமையால் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பிலுள்ள போதனா வைத்தியசாலைகளில் விளைவற்றிருந்தன.

### 3.4 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 133(2) மற்றும் 2010 யூன் 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடர்பான செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது தனியான உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டது என்பதற்கான சான்றெதுவும் கணக்காய்வில் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

வைத்தியசாலைகளின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு முறைமைகளை முன்னேற்றுவதற்கான சர்வதேச ரீதியான வெளிப்படுத்தல் மற்றும் பயிற்சி வசதிகளை வழங்குவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. ஆகையால், வரிசை அமைச்சின் 59 கணக்காளர்கள் 2015 யூனிலிருந்து 2016 ஆகஸ்ட் வரை 04 சந்தர்ப்பங்களில் தாய்லாந்தில் நடைபெற்ற 05 நாள் பயிற்சி செயலமர்வுகளில் பங்குபற்றியிருந்தனர். பின்வரும் சர்ச்சைத் தன்மையான விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) முதல் 02 நிகழ்ச்சித்திட்டங்களிற்காக குழுத் தலைவராகவும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களிற்காக வளவாளராகவும் பிரதிநிதித்துவப்படுத்தி அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களிலும் வரிசை அமைச்சின் பிரதான கணக்காளர்கள் பங்குபற்றியிருந்தனர். மேலும், பிரதமரின் அங்கீகாரத்திற்காக வெளிநாட்டுப் பயிற்சிக்கான முன்னைய பங்குபற்றல் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்தாமல் 2016 இல் 02 நிகழ்ச்சித்திட்டங்களிற்காக வரிசை அமைச்சின் உயிர் மருத்துவப் பொறியியல் பிரிவிற்கு இணைக்கப்பட்ட கணக்காளரொருவர் பங்குபற்றியிருந்தார்.

(ஆ) தளபாடம், அலுவலக உபகரணம் மற்றும் கட்டிடக் கட்டமைப்புக்களின் கொள்வனவிற்காக வரிசை அமைச்சின் பாதீட்டு மதிப்பீடுகளிலுள்ள வெளிநாட்டு நிதியளித்தல் மூலங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 18.17 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வெளிநாட்டு விஜயங்களிற்காக மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட விடயத்தை திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உத்தியோகத்தரொருவரிற்கு வழங்கப்பட்ட ரூபா 326,916 முற்பணம் உத்தியோகத்தர் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றியிருக்காததால் 2015 திசெம்பரில் உரிய முற்பணம் மீள்நிதியிடப்பட்ட போதிலும் 2016 இல் வாக்குப்பணப் பேரேட்டில் செலவினமொன்றாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(ஈ) பிரதமரின் செயலாளரின் 1989 நவம்பர் 30 இன் பிஎம்/பிஎஸ்/05 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் வேண்டப்பட்டவாறு நாட்டினை வந்தடைந்த பின்னர் 07 நாட்களிற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வெளிநாட்டு விஜயம் மீதான அறிக்கைகள் 45 உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.